ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1772/36 - 2012 අගෝස්තු මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.08.23

1772/36 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### யட்டிநுவர பிரதேச சபை

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது வகுதியின் (VII) உப பிரிவின் ஏ பந்தியின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய யட்டிநுவர பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணை விதிகள் யட்டிநுவர பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*
*மத்திய மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண மாகாண சபை,*
*கண்டி,*
*2012, யூலை 06.*

### வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்

*1. இந்தத் துணை விதிகள் யட்டிநுவர பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது, கட்டுப்படுத்துவது, நெறிப்படுத்துவது, கட்டணங்களை அறவிடுவது தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. பிரதேச சபையின் மூலம் அனுமதிக்கப்பட்டு, தலைவரினால் அறிவிக்கப்பட்டு இங்கு முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள இடங்கள் தவிர, வேறு எந்த இடங்களிலும் வாடகைக்காக ஓடும் நோக்கத்துடன் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இடங்களை மாற்றியமைக்கவோ, புதிய இடங்களைப் பெயரிடவோ முடியும்.*

*3. யட்டிநுவர பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் 02 ஆவது துணை விதிக்கமைய முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தையும், அதற்குரிய அரச கட்டணங்களையும் சபையிடம் வருடாந்தம் செலுத்திய பின்னர் உரிய இடங்களில் வாடகை வாகனங்களை நிறுத்தி வைத்தல் வேண்டும். அந்த வாடகை வாகனங்கள் சபையில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். கட்டணங்கள் காலத்துக்குக் காலம் சபையின் மூலம் தீர்மானம் செய்யப்பட முடியும். கட்டணத் திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் நடைமுறைக்கு வரும்.*

4. பிரதேச சபையின் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரேனும் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள, இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடங்களில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. இந்த நடைமுறை முற்பகல் 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை செயற்படுத்தப்படும். இலக்கம் 01 இற்கு அமைய புதிய தரிப்பிடங்களை ஏற்படுத்துவதில் பொதுச் சபையில் பிரேரணைகள் வழிமொழியப்படுதல் வேண்டும்.

5. இந்தத் துணை விதிகளின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரமும் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அதன் செல்லுபடிக் காலம் அது வழங்கப்பட்ட உரிய மாதத்தின் கடைசித் திகதியுடன் முடிவடையும்.

6. அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெறுவதற்காக யட்டிநுவர பிரதேச சபை விநியோகிக்கும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான விண்ணப்பப் படிவத்தை உரிமையாளர் அல்லது சாரதி சபையின் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.

7. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு வாகனம் தொடர்பான அனுமதிப் பத்திரத்தைக் காட்டும் வண்ணம் உரிமையாளரிடமோ அல்லது சாரதியிடமோ வாகனக் கட்டுப்பாட்டாளர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் வேண்டிக் கொள்ளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைப் பரிசீலிப்பதற்காக அவர் முன்வைத்தல் வேண்டும்.

8. ஒவ்வொரு வருடத்திலும் சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் உரிய வருடத்துக்கான வாகனம் நிறுத்தி வைப்பதற்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

9. யட்டிநுவர பிரதேச சபையின் மூலம் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி எந்தவொரு வாகனத்தையும் வாகனத் தரிப்பிடத்தில் நுழைத்தல் கூடாது.

10. நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வாகனத் தரிப்பிடமொன்றில் இருந்து வாகனத்தை 14 நாட்களுக்குக் குறையாத காலத்துக்கு அகற்றிக்கொள்ள நேர்ந்தால் அது பற்றி சபையின் அலுவலகத்தில் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல் ஏதும் செயற்படாதவிடத்து, உரிய மாதத்துக்கான கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

11. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் எந்தவொரு வாகனத்தையும் திருத்தம் செய்வதோ, கழுவுவதோ அல்லது கழுவச் செய்வதோ கூடாது.

12. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் அல்லது வாகனம் ஒன்றினுள் எவரேனும் குடிபோதையிலோ, தகாத முறையிலோ அல்லது ஏனையோருக்கு இடையூறு ஏற்படும் விதத்திலோ நடந்து கொள்வது கூடாது.

13. இந்தத் துணை விதிகளின் எந்தவொரு ஏற்பாட்டையும் மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதிகாரம் கொண்ட நீதிமன்றம் இதனைக் குற்றமாகக் கருதி விதிக்கும் உச்ச அளவுத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும். மேலும் இந்த மீறல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால், அல்லது இது பற்றிய கவனத்தை ஈர்த்துத் தலைவரது அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரது எழுத்துமூல அறிவித்தலைப் பெற்ற பின்னரும் மீறப்பட்டால் அவ்வாறு மீறப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் மேலதிகத் தண்டத்துக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் 2 ஆவது உப பிரிவின்படி உட்படுதல் வேண்டும்.

14. உரிய அதிகாரங்களைக் கொண்டுள்ள நீதிமன்றம் விதிக்கும் வேறு ஏதும் தண்டத்துக்கு மேலதிகமாக இந்தத் துணை விதிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் மீறிய குற்றத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரது பதிவு இரத்துச் செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும். மேலும், அவ்வாறு இரத்துச் செய்வது தொடர்பாக எந்தவித நட்டஈட்டையும் பெற அவருக்கு உரித்து இல்லை.

15. பதங்கள் பற்றிய தெளிவு தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில் “சபை” என்பது யட்டிநுவர பிரதேச சபையையும்,
“தலைவர்” என்பது யட்டிநுவர பிரதேச சபையின் தலைவரையும்,
“அதிகாரம் பெற்ற அலுவலர்” என்பது யட்டிநுவர பிரதேச சபையின் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரையும்,
“வாகனக் கட்டுப்பாட்டாளர்” என்பது யட்டிநுவர பிரதேச சபை நியமித்துள்ள வாகனங்களைக் கட்டுப்படுத்தும் அலுவலரையும்,
“மோட்டார் வாகனம் அல்லது வாடகை வாகனம்” என்பது முச்சக்கர வண்டியையோ, லொறி வண்டியையோ, ட்ராக் வண்டியையோ, மோட்டார் வானையோ, திராக்டரையோ, மோட்டார் காரையோ, இரண்டு சக்கர திராக்டரையோ குறிக்கும்.

இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

### அட்டவணை 01

### யட்டிநுவர பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள இடங்கள்

1. பேராதெனிய நகரில் பேராதெனிய கெற்றம்பே வீதியில் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) வலதுபுறச் சந்தியிலிருந்து 30 மீற்றர் நீளம்.

2. பேராதெனிய நகரில் கென்ஹிந்த வீதியின் ஆரம்பத்திலிருந்து இடதுபுறத்தில் 20 மீற்றர் நீளம்.

3. பேராதெனிய கெற்றம்பே வீதியில் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) கொரக்காதெனிய சந்தியின் எதிரில் வலதுபுறம் 1/4 மற்றும் 1/5 மதகுகளுக்கிடையிலும் தேசக்தி அலுவலகக் கட்டட எல்லையிலுமிருந்து 12 மீற்றர் நீளம்.

4. பேராதெனிய கெற்றம்பே வீதியில் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) 3/2 மதகு அருகிலிருந்து வலதுபுறத்தில் 10 மீற்றர் நீளம்.

5. பேராதெனிய கெற்றம்பே வீதியில் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) சோயா சந்தியின் இடதுபுறம் 2/6 மதகு அருகிலிருந்து 30 மீற்றர் நீளம்.

6. பேராதெனிய கெற்றம்பே வீதியில் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) ஹதபிம அதிகாரசபை அலுவலக எதிரில் சந்தியிலிருந்து கொஹாகொட கட்டுகஸ்தோட்டை வீதியை நோக்கிய வலதுபுறம் 20 மீற்றர் நீளம்.

7. பஹல ஈரியகம சந்தியில் ப்ரகதி மாவத்த நோக்கிய வலதுபுற ஆரம்பத்திலிருந்து 20 மீற்றர் நீளம்.

8. பொல்கஹமுல சந்தியில் அலதெனிய வீதியை நோக்கிய இடதுபுறம் 25 மீற்றர் தூரத்தின் ஆரம்பம் முதல் 20 மீற்றர் நீளம்.

9. பொல்கஹமுல ஏதண்டுவாவ சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலிருந்து ஆரம்பமாகும் இடத்திலிருந்து 20 மீற்றர் நீளம்.

10. கெஹெல்வல சந்தியில் கெஹெல்வல பன்சல நோக்கிய பாதையின் ஆரம்பத்திலிருந்து 10 மீற்றர் வரை.

11. கிரிபத்கும்புற ஓவல சந்தியில் ஓவல நோக்கிய பாதையின் ஆரம்பத்திலிருந்து 12 மீற்றர் நீளம்.

12. கிரிபத்கும்புற நகரில் வத்துரகும்புற வீதியின் இடதுபுற ஆரம்பத்திலிருந்து 20 மீற்றர் நீளம்.

13. கன்னொறுவ முருத்தலாவ வீதி பல்கரும மண்டபத்தின் எதிரில் இடதுபுறச் சந்தியிலிருந்து முருத்தலாவை நோக்கிய 17 மீற்றர் நீளம்.

14. கன்னொறுவ முருத்தலாவ வீதி பூட்டுப்பாலம் அருகில் புஸ்பாராம பன்சல நோக்கிய வலதுபுறம் ஆரம்பத்திலிருந்து 12 மீற்றர் நீளம்.

15. முருத்தலாவ நகரின் நாற்சந்தி அருகில் வலது பக்கத்திலிருந்து பொல்கஹமுல நோக்கிய 25 மீற்றர் நீளம்.

16. முருத்தலாவ நகரின் கிராமிய வங்கியின் இடதுபுறம் அலதெனிய நோக்கிய 20 மீற்றர் நீளம்.

17. கம்பியடிய சந்தியின் வலதுபுற ஆரம்பத்திலிருந்து முருத்தலாவ நகரை நோக்கிய 25 மீற்றர் நீளம்.

18. யஹலதன்ன சந்தியிலிருந்து பள்ளிவாசல் எதிரில் இடதுபுறம் அலதெனிய நகரம் நோக்கிய 20 மீற்றர் நீளம்.

19. பொல்கஹமுல அலதெனிய வீதியில் இலுக்வத்த சந்தியின் ஆரம்பத்திலிருந்து இடதுபுறம் பொல்கஹமுல நோக்கிய 20 மீற்றர் நீளம்.

20. பொல்கஹமுல அலதெனிய வீதியில் பிலபிட்டிய போதிய அருகில் எதிர்ப்புறத்திலிருந்து வலதுபுறம் அலதெனிய நோக்கிய 15 மீற்றர் நீளம்.

21. பொல்கஹமுல அலதெனிய வீதியில் 5 ஆம் கட்டை அருகில் சந்தியின் எதிரில் ஆரம்பித்து பொல்கஹமுல நோக்கிய 10 மீற்றர் நீளம்.

22. கிரிபத்கும்புற வத்துரகும்புற பாதையில் புளுமுல்ல சந்தியில் கிராகாங்க நோக்கிய வலது புறத்திலிருந்து 10 மீற்றர் நீளம்.

23. கிரிபத்கும்புற வத்துரகும்புற பாதையில் சூரியகொட சந்தியின் இடதுபுறம் ஆரம்பித்து சூரியகொட நோக்கிய 10 மீற்றர் நீளம்.

24. கிரிபத்கும்புற வத்துரகும்புற பாதையில் மொலதண்ட சந்தி பஸ் தரிப்பிடத்திலிருந்து இடது புறம் வத்துரகும்புற நோக்கிய 10 மீற்றர் நீளம்.

25. கிரிபத்கும்புற வத்துரகும்புற பாதையில் இடம்பிட்டிய சந்தியிலிருந்து இடது புறம் கிரிபத்கும்புற நோக்கிய 10 மீற்றர் நீளம்.

26. தியபலாகொட சந்தியின் ஆரம்பத்திலிருந்து பெப்பொலாங்க நோக்கிய இடதுபுறம் 20 மீற்றர் நீளம்.

27. கொடமுதுன சந்தியின் ஆரம்பத்திலிருந்து வலதுபுறமாக வத்துரகும்புற நோக்கிய 20 மீற்றர் நீளம்.

28. வத்துரகும்புற பாடசாலை மாவத்த அருகிலுள்ள சந்தி.

29. வத்துரகும்புற வெதன்ன சந்தியின் ஆரம்பத்திலிருந்து வலதுபுறம் வெவதன்ன நோக்கிய 10 மீற்றர் நீளம்.

30. கஹவத்துகொட சந்தியின் ஆரம்ப இடத்தின் வலதுபுறத்திலிருந்து கஹவத்துகொட நோக்கிய 10 மீற்றர் நீளம்.

31. கிராகம தேயிலைத் தொழிற்சாலை அருகில் நாகொல்லாகம நோக்கிய வலதுபுற ஆரம்பத்திலிருந்து 10 மீற்றர் நீளம்.

32. பாரகெற்றவல சந்தியில் பிலிமதலாவ நோக்கிய பிரதான வீதியின் இடதுபுற ஆரம்பத்திலிருந்து.

33. சியம்பலாகொட சந்தியின் ஆரம்பத்திலிருந்து வலதுபுறம் பிலிமதலாவ நோக்கிய 15 மீற்றர் நீளம்.

34. தந்துரே நகரின் உடவல வீதி திரும்பும் சந்தியின் இடதுபுற ஆரம்பத்திலிருந்து 20 மீற்றர் நீளம்.

35. தம்பகொட சந்தியின் ஆரம்பத்திலிருந்து இடதுபுறம் தம்பகொட நோக்கிய 8 மீற்றர் நீளம்.

36. வல்கம்பாய சந்தியின் ஆரம்ப இடத்திலிருந்து இடதுபுறம் தந்துரே நகர் நோக்கிய 30 மீற்றர் நீளம்.

37. வல்கொவ்வாகொட சந்தியில் வல்கொவ்வாகொட நோக்கிய பாதையின் இடதுபுற ஆரம்பத்திலிருந்து 30 மீற்றர் நீளம்.

38. ரத்தேபிட்டிய சந்தி பிரதான வீதியில் பொத்தபிட்டிய செல்கையில் இடதுபுறம் பிரதான வீதியில் ஏறத்தாழ 50 மீற்றர் நீளம்.

39. கெட்டபிட்டிய சந்தியின் ஆண்டியாதன்ன பாதையின் வலதுபுறத் தோட்டத்தின் 30 மீற்றர் நீளம்.

40. மெனிக்திவெல சந்தி பாடசாலை எதிரில் பிரதான பாதையில் பொத்தபிட்டிய நோக்கிய வலதுபுறத்தில் ஏறத்தாழ 30 மீற்றர் நீளம்.

41. பொத்தபிட்டிய நகர பஸ் தரிப்பிடத்தின் எதிரிலுள்ள பாதையில் பிலிமதலாவ நோக்கிய பாதையில் இடதுபுறம் நோக்கிய ஏறத்தாழ 50 மீற்றர் நீளம்.

42. தொடம்வெல தேவாலய மளுவ எதிரிலுள்ள பாதையில் ஏறத்தாழ 15 மீற்றர் நீளம்.

43. பெப்பொலாங்க சந்தியில் பாடசாலைத் திசையில் உள்ள பாதையில் வலதுபுறம் ஏறத்தாழ 20 மீற்றர் நீளம்.

44. உடவெல பாடசாலை அருகில் பஸ்வண்டி திருப்பும் இடத்தில் ஏறத்தாழ 10 மீற்றர் நீளம்.

45. கொழும்பு கண்டி வீதியிலிருந்து போயகம நோக்கிச் செல்கையில் பாதையின் ஆரம்பத்திலிருந்து வலதுபுறம் 30 மீற்றர் நீளம்.

46. கொழும்பு கண்டி பிரதான வீதியில் தேவதர்ம சாஸ்திராலயம் நோக்கிய தோட்டத்தில் பஸ் தரிப்பிடம் தவிர்ந்த ஏறத்தாழ 10 மீற்றர் நீளம்.

47. கொழும்பு கண்டி பிரதான வீதியிலிருந்து ஹீரஸ்ஸகல பாதையின் இடதுபுறம் நோக்கிய 10 மீற்றர் நீளம்.

48. கொழும்பு கண்டி பிரதான வீதியிலிருந்து பழைய பிரதேச சபைக் கட்டடத்தின் அருகில் 106-4 இலக்க மதகு அருகில் ஏறத்தாழ 10 மீற்றர் நீளம்.

49. தெஹியங்க பள்ளி எதிரிலுள்ள பாதையில் ஏறத்தாழ 20 மீற்றர் நீளம்.

50. தெஹியங்க நகர மத்தியில் பஸ் தரிப்பிடத்தின் எதிரிலுள்ள பாதையில் ஏறத்தாழ 20 மீற்றர் நீளம்.

51. தம்பலந்த சந்தி புத்தர் சிலை அருகிலிருந்து குருந்துவத்த வீதி தவிர்ந்த பிரதான வீதியின் ஏறத்தாழ 10 மீற்றர் நீளம்.

52. முன்வத்துகொட பள்ளிக்குத் திரும்பும் சந்தியிலிருந்து பள்ளி நோக்கிய பாதையில் ஏறத்தாழ 10 மீற்றர் நீளம்.

**அட்டவணை - 02**

**(வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம்)**

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | லொறி | 1,000 00 |
| 2. | மோட்டார் வான் | 1,000 00 |
| 3. | ட்ரேலருடனான திராக்டர் | 1,000 00 |
| 4. | மோட்டார் கார் | 900 00 |
| 5. | கை திராக்டர் | 600 00 |
| 6. | முச்சக்கர வண்டி | 600 00 |

**அட்டவணை 03**

அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பப்படிவம்

01. வாகன வகையும் இலக்கமும்:
02. உரிமையாளரது பெயரும் தேசிய அடையாள அட்டை இலக்கமும்:----.
03. முகவரி:----.
04. சாரதியின் பெயர்:----.
05. சாரதியின் ஆளடையாள அட்டை இலக்கம்:----.
06. சாரதியின் அனுமதிப்பத்திர இலக்கம்:----.
07. சாரதியின் முகவரி:----.
08. வாகனத்தை நிறுத்த உத்தேசித்துள்ள தரிப்பிடம்:----.
09. வாகனம் பயன்படுத்தப்படும் நோக்கம்:----.
10. அதன் கொள்ளளவும் நிறையும்:----.

மேற்காட்டிய தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

....................,
விண்ணப்பதாரியின்/சாரதியின் கையொப்பம்.

திகதி :........................................

வருமான பரிசோதகரது அறிக்கை.
1. தரிப்பிடம் பற்றிய விபரம்.

2. அனுமதிப்பத்திரக் கட்டணம்.

......................... வருடத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதை பரிந்துரைக்கிறேன்/பரிந்துரைக்கவில்லை.

....................,
வருமானப் பரிசோதகர்.

*தலைவரது அங்கீகாரம் :*

*மேற்குறிப்பிட்ட விபரங்களுக்கமைய அனுமதிப்பத்திரத்தை வழங்க அங்கீகாரம் வழங்குகின்றேன்/வழங்கவில்லை.*

.................,
*தலைவர்,*
*யட்டிநுவர பிரதேச சபை.*

*திகதி:*

*9-213/1*

---

***ரத்தோட்டை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணைவிதிகள்***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது வகுதியின் (VII) உப பிரிவின் (ஏ) பந்தியின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ரத்தோட்டை பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணை விதிகள் ரத்தோட்டை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண சபை,*
*கண்டி,*
*2012.07.12.*

***வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்***

*1. இந்தத் துணை விதிகள் ரத்தோட்டை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது, கட்டுப்படுத்துவது, நெறிப்படுத்துவது, கட்டணங்களை அறவிடுவது தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. பிரதேச சபையின் மூலம் அனுமதிக்கப்பட்டு, தலைவரினால் அறிவிக்கப்பட்டு இங்கு முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள இடங்கள் தவிர, வேறு எந்த இடங்களிலும் வாடகைக்காக ஓடும் நோக்கத்துடன் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இடங்களை மாற்றியமைக்கவோ, புதிய இடங்களைப் பெயரிடவோ முடியும்.*

*3. ரத்தோட்டை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தி வைப்பது தொடர்பான துணைவிதிகளுக்கமைய முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அ, ஆ, இ என்ற இடங்களில் மூன்றாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிறுத்தி வைப்பதற்கான பதிவுக் கட்டணம் அறவிடப்படும்.*

*4. ரத்தோட்டை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குரிய இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இடங்களுக்கென நான்காம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த பதிவுக் கட்டணமும் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணமும் அறவிடப்படும்.*

*5. இந்தத் துணை விதிகளின் கீழ் ரத்தோட்டை நகர எல்லைக்குள் வாடகை வாகனங்களெனச் சேவையில் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டிகள், லொறி வண்டிகள், மோட்டார் வான்கள் என்பவற்றுக்கென நாளாந்தக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் பற்றுச்சீட்டை ஓட்டுநர்/குத்தகையாளர்/உரிமையாளர் தம் வசம் வைத்திருத்தல் வேண்டும்.*

*6. பிரதேச சபையின் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரேனும் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள, இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடங்களில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. இந்த நடைமுறை முற்பகல் 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை செயற்படுத்தப்படும்.*

*7. இந்தத் துணை விதிகளின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரமும் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அதன் செல்லுபடிக் காலம் அது வழங்கப்பட்ட உரிய மாதத்தின் கடைசித் திகதியுடன் முடிவடையும்.*

*8. அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெறுவதற்காக ரத்தோட்டை பிரதேச சபை விநியோகிக்கும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான விண்ணப்பப் படிவத்தை உரிமையாளர் அல்லது சாரதி சபையின் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.*

*9. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு வாகனம் தொடர்பான அனுமதிப் பத்திரத்தைக் காட்டும் வண்ணம் உரிமையாளரிடமோ அல்லது சாரதியிடமோ வாகனக் கட்டுப்பாட்டாளர் அல்லது குறித்த கருமத்துக்கெனத் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் வேண்டிக் கொள்ளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைப் பரிசீலிப்பதற்காக அவர் முன்வைத்தல் வேண்டும்.*

*10. மாதத்தின் முதலாம் திகதிக்கு முன்னர் உரிய மாதத்துக்கான வாகனம் நிறுத்தி வைப்பதற்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

*11. ரத்தோட்டை பிரதேச சபையின் மூலம் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரம் இன்றி எந்தவொரு வாகனத்தையும் வாடகை வாகனத் தரிப்பிடத்தில் நுழைத்தல் கூடாது.*

*12. நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வாகனத் தரிப்பிடமொன்றில் இருந்து வாகனத்தை 14 நாட்களுக்குக் குறையாத காலத்துக்கு அகற்றிக்கொள்ள நேர்ந்தால் அது பற்றி சபை அலுவலகத்தில் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல் ஏதும் செயற்படாதவிடத்து, உரிய மாதத்துக்கான கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.*

*13. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் எந்தவொரு வாகனத்தையும் திருத்தம் செய்வதோ, கழுவுவதோ அல்லது கழுவச் செய்வதோ கூடாது.*

*14. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் அல்லது வாகனம் ஒன்றினுள் எவரேனும் குடிபோதையிலோ, தகாத முறையிலோ அல்லது ஏனையோருக்கு இடையூறு ஏற்படும் விதத்திலோ நடந்து கொள்வதோ கூடாது.*

*15. இந்தத் துணை விதிகளின் எந்தவொரு ஏற்பாட்டையும் மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதிகாரம் கொண்ட நீதிமன்றம் இதனைக் குற்றமாகக் கருதி விதிக்கும் உச்ச அளவுத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும். மேலும் இந்த மீறல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால், அல்லது இது பற்றிய கவனத்தை ஈர்த்துத் தலைவரது அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரது எழுத்துமூல அறிவித்தலைப் பெற்ற பின்னரும் மீறப்பட்டால் அவ்வாறு மீறப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் மேலதிகத் தண்டத்துக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் 2 ஆவது உப பிரிவின்படி உட்படுதல் வேண்டும்.*

*16. உரிய அதிகாரங்களைக் கொண்டுள்ள நீதிமன்றம் விதிக்கும் வேறு ஏதும் தண்டத்துக்கு மேலதிகமாக இந்தத் துணை விதிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் மீறிய குற்றத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரது பதிவு இரத்துச் செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும். மேலும், அவ்வாறு இரத்துச் செய்வது தொடர்பாக எந்தவித நட்டஈட்டையும் பெற அவருக்கு உரித்து இல்லை.*

*17. பதங்கள் பற்றி ய தெளிவு தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில் "சபை" என்பது ரத்தோட்டை பிரதேச சபையையும்,*
*"தலைவர்" என்பது ரத்தோட்டை பிரதேச சபையின் தலைவரையும்,*
*"அதிகாரம் பெற்ற அலுவலர்" என்பது ரத்தோட்டை பிரதேச சபையின் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரையும்,*
*"வாகனக் கட்டுப்பாட்டாளர்" என்பது ரத்தோட்டை பிரதேச சபை நியமித்துள்ள வாகனங்களைக் கட்டுப்படுத்தும் அலுவலரையும்,*
*"மோட்டார் வாகனம் அல்லது வாடகை வாகனம்" என்பது முச்சக்கர வண்டியையோ, லொறி வண்டியையோ, ட்ராக் வண்டியையோ, மோட்டார் வானையோ, திராக்டரையோ மோட்டார் காரையோ, இரண்டு சக்கர திராக்டரையோ குறிக்கும்.*

*இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.*

***அட்டவணை - 01***
***அடையாளமிடப்பட்டுள்ள இடங்கள் (முச்சக்கர வண்டிகள்)***

*1. புஞ்சி ரத்தோட்டை நகரம் (பள்ளிக்கு அருகில்) 60 அடி நீளம். 108 ஆம் இலக்க கடை அறையிலிருந்து பள்ளிவாசல் வரை (வலதுபுறம்)*

2. ரஞ்சன் விஜேரத்ன மாவத்த மாமரத்தின் அருகிலிருந்து பெட்டிக்கடை முடியும்வரை 33 அடி நீளம் (வலதுபுறம்)

3. ஜனக பண்டார தென்னகோன் மாவத்த - 103 அடி நீளம் 53/11 ஆம் இலக்க கடையின் எதிரிலிருந்து ஜனக பண்டார தென்னகோன் மாவத்த, 18 ஆம் இலக்க கடை வரை 103 அடி நீளம் (இடதுபுறம்)

4. ரீ. டி. ஜயரத்ன மாவத்த (கடை அறைகளின் எதிரில்) ரீ. டி. ஜயரத்ன மாவத்த கடை அறை இலக்கம் 04 முதல் 08 வரை 40 அடி நீளம் (வலதுபுறம்)

5. நிக்கலோயா வீதி லதா ஸ்ருடியோ அருகிலிருந்து புதிய வர்த்தகத் தொகுதி 07 ஆம் இலக்க கடை அறை வரை 86 அடி நீளம் (இடதுபுறம்)

6. கம்மமுவ வீதி நடமாடும் மீன்கடை அருகிலிருந்து 10 ஆம் இலக்க பற்றரி திருத்தும் நிலையம் வரை 100 அடி நீளம் (வலதுபுறம்)

7. ரத்தோட்டை விநாயகர் கோவில் அருகிலுள்ள பகுதி 40 அடி நீளம் (வலதுபுறம்)

8. குருவாவ நாற்றுமேடை அருகில். குருவாவ ஆயுர்வேத மருந்தகம் மற்றும் பஸ் தரிப்பிடம் வரை 25 அடி நீளம் (இடதுபுறம்)

9. ரத்தோட்டை மாத்தளை வீதி இலக்கம் 35 முதல் 37 வரையுள்ள கடை அறைகள் அருகில் 20 அடி நீளம் (இடதுபுறம்)

10. அம்பகஸ்தன்ன நகரம் 59 அடி நீளம். மனுமின் கேற்றரர்ஸ் கடையிலிருந்து தசநாயக்க ஸ்ரோர்ஸ் கடை வரை.

11. கம்பியடிச் சந்தி 120 அடி நீளம். பஸ் தரிப்பிடத்திலிருந்து 88 ஆவது தொலைபேசித் தூண் வரை.

12. கைக்காவல கொஸ்வன சந்தி 90 அடி நீளம் பஸ் தரிப்பிடத்திலிருந்து மின்கம்பம் 59, 58 மற்றும் பிரதான மதகு வரை.

13. கைக்காவல இசுருகம வீதியில் 167 அடி நீளம். தசநாயக்க ஸ்ரோர்ஸ் எதிரில் விதாதா வள நிலைய நுழைவாயில் பலகை வரை.

14. ஹுனுகல சந்தியில் 60 அடி நீளம்.

15. வேரகம பண்டாரபொல வீதியில் 100 அடி நீளம். பஸ் தரிப்பிடத்திலிருந்து திரு. வேரகம என்பவரது வீடு வரை.

16. இக்கிரியகொல்ல சந்தி 45 அடி நீளம். கூட்டுறவுக் கட்டடத்திலிருந்து பெயர்ப்பலகை வரை.

17. கைனேக சந்தி 80 அடி நீளம். கைனேக கராஜ் அருகிலிருந்து சமாதி மாவத்த வரை.

18. களுதாவளை தேவாலயத்தின் எதிரில் 60 அடி நீளம். இடது புறத்திலுள்ள பழக்கடையிலிருந்து திரு. ராஜா என்பவரது கடை அருகே வரை.

19. கிவுல சந்தி 25 அடி நீளம். திரு. திஸ்ஸகுமார என்பவரது கடையிலிருந்து மாத்தளை வீதி போகஹமுல மதகு வரை.

20. பண்டாரபொல சந்தி 25 அடி நீளம். மாத்தளை பண்டாரபொல வித்தியாலய நுழைவாயில் அருகில்.

21. அல்வத்த சந்தி. 60 அடி நீளம்.

22. தம்பலகல சந்தி 50 அடி நீளம். திரு. சிக்னேஸ்வரன் என்பவரது கடையிலிருந்து இலக்கம் 03 லைன் அறை வரை.

23. கம்பரகல சந்தி 40 அடி நீளம். திரு. வெள்ளைச்சாமி என்பவரது வீட்டின் எதிரிலுள்ள மின்கம்பங்கள் இரண்டின் அருகில்.

24. பிட்டகந்த சந்தி 40 அடி நீளம். விஜேந்திரன் என்பவரது கடை அருகிலிருந்து சவுக்கு மரம் வரை.

25. முவன்தெனிய சந்தி 50 அடி நீளம். உத்தேச அஞ்சல் அலுவலகம் எதிரில்.

26. வெட்டஸ்யாய சந்தி 100 அடி நீளம். முத்தெட்டுவ சந்தி பெட்டிமடுவக் கடை அருகில்.

27. கந்தேநுவர நகரம். 100 அடி நீளம். பால் சேகரிப்பு நிலையத்திலிருந்து சத்தியவேலு கடை வரை.

28. திக்கும்புற சந்தி 50 அடி நீளம். குணசிங்ஹ வர்த்தக நிலையத்தின் எதிரில்.

29. மடகும்புற 25 ஆம் கட்டை அருகில் 25 அடி நீளம். திரு. ரத்நாயக்க என்பவரது வீடு மற்றும் காணி அருகில்.

30. நிக்கலோயா சந்தி 50 அடி நீளம். மிட்லிஸ் தோட்டத்தின் இடதுபுறம், இலுக்கும்புற வீதி

31. ரிவர்ஸ்டன் வீதி மெதவத்த சந்தி. 50 அடி நீளம்.

32. பொல்வத்தாகந்த சந்தி 50 அடி நீளம். சூர்யா கடை அருகில் இடதுபுறம்.

33. தம்பகொல்ல சந்தி 25 அடி நீளம். கொரோலிஸ் முதலாளி கடை அருகில்.

34. வெரலுகஸ்தன்ன சந்தி. 50 அடி நீளம். 25 ஆவது சந்தி. திரு. ரத்நாயக்க என்பவரது வீடு அருகில்.

35. வெலங்கஹவத்த வீதியில் கொட்டகஹமுல சந்தி 50 அடி நீளம். திரு. தமுனுபொல என்பவரது வீடு அருகில்.

36. மாஉஸ்ஸாகொல்ல சந்தி 30 அடி நீளம். மாஉஸ்ஸாகொல்ல வனராணி பன்சல அருகில் அளுத்கெதரகந்த அருகில்.

37. வெலங்கஹவத்த பாடசாலை அருகில் 25 அடி நீளம். பஸ் தரிப்பிடம் அருகில். இடதுபுறம். அரசாங்கப் பாடசாலை அருகில்.

38. அலகொலமட தென்னவல திரும்பும் சந்தியில் 50 அடி நீளம்.

39. போகம்பர போதிய அருகில் 60 அடி நீளம். திரு. குமார என்பவரது வர்த்தக நிலையம் அருகில். வலதுபுறம்.

40. கொஸ்வான பாலம் அருகில். 100 அடி நீளம். கொஸ்வான வலது மற்றும் கன்சரபொல செல்லும் சந்தி அரசாங்க வீடுகள்.

**(அ) அடையாளமிடப்பட்டுள்ள இடங்கள் (மோட்டார் வான்கள்)**

1. ரீ. டி. ஜயரத்ன மாவத்த ஆரம்பிக்கும் இடம் மற்றும் மாத்தளை வீதி இலக்கம் 53 கடை அறை வரை 66 அடி நீளம். (இடதுபுறம்)

**(ஆ) அடையாளமிடப்பட்டுள்ள இடங்கள் (லொறி வண்டிகள்)**

1. ரத்தோட்டை மாத்தளை வீதி இலக்கம் 25 - 35 வரையுள்ள கடை அறைகள் வரை 125 அடி. (இடதுபுறம்)

2. மெல்லகொல்ல வீதி சந்தியிலிருந்து 30/2, திரு. ஜோசப் என்பவரது வீடு வரை 400 அடி (இடதுபுறம்)

**அட்டவணை - 02**

**வாடகை வாகனம் நிறுத்தி வைப்பதற்குரிய அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பப்படிவம்**

1. உரிமையாளரது பெயர்:----.

2. உரிமையாளரது முகவரி :----.

3. வாகன வகையும் அதன் வர்த்தகப் பெயரும் :----.

4. வாகனத்தின் பதிவிலக்கம் :----.

5. சாரதியின் பெயர் :----.

6. சாரதியின் முகவரி :----.

7. சாரதியின் ஆளடையாள அட்டையின் இலக்கமும் சாரதி அனுமதிப்பத்திர இலக்கமும் :----.

8. சாரதி உதயியாளர் ஒருவர் இருப்பின் அவரது பெயரும் முகவரியும் :----.

9. வாகனத்தை நிறுத்த உத்தேசித்துள்ள தரிப்பிடம் :----.

10. வாகனம் பயன்படுத்தப்படும் நோக்கம் :----.

11. அதன் கொள்ளளவும் நிறையும் :----.

12. உரிமையாளரை உறுதிப்படுத்துவதற்கென முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்களது போட்டோ பிரதிகள் :----.
(விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கவும்)

மேற்காட்டிய தகவல்கள் அனைத்தும் உண்மையானவை எனவும், துணை விதிகளுக்கமைய செயற்படுத்துவதற்கு இணங்குகின்றேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

....................,
வாகன உரிமையாளரது கையொப்பம்.

திகதி:

**அட்டவணை - 03**

| வாகன வகை | வருடாந்த பதிவுக் கட்டணம் ரூபா ச. | அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 1. முச்சக்கர வண்டி | 250 00 | 10 00 |
| 2. மோட்டார் வான் | 300 00 | 15 00 |
| 3. லொறி வண்டி | 500 00 | 15 00 |
| 4. பஸ் வண்டி | 1000 00 | 20 00 |

**அட்டவணை - 04**

| வாகன வகை | வருடாந்த பதிவுக் கட்டணம் ரூபா ச. | அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 1. முச்சக்கர வண்டி | 100 00 | 500 00 |
| 2. மோட்டார் வான் | 200 00 | 750 00 |
| 3. லொறி வண்டி | 200 00 | 750 00 |
| 4. தனியார் பஸ் வண்டி | 300 00 | 1000 00 |

9-213/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.